## நிதிய முகாமையாளரின் மீளாய்வு

### பொருளாதார மீளாய்வு

இலங்கையின் பொருளாதாரமானது ஆறு தொடர்ச்சியான மொ.உ.உ. இலான சுருக்கத்தினைத் தொடர்ந்து 2023 இன் 3ஆம் காலாண்டில் 1.6%[1] ஆல் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியானது மூன்று பிரதான பொருளாதாரத் துறைகளின் விரிவாக்கத்தினால், விசேடமாக விவசாயத் துறை, உந்தப்பட்டது. இதன் பிரகாரம், விவசாய, கைத்தொழில் மற்றும் சேவை நடவடிக்கைகள் 2023 இன் 3ஆம் காலாண்டில் முறையே 3%[1], 0.3%[1], 1.3%[1] இனால் விரிவடைந்தது. பரிமாற்றல் வீதங்களிலான சாதகமான மாற்றங்கள், குறைவான வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கத்திலான மிதமான நிலை என்பன வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புக்களை மேம்படுத்தியது. உலக வங்கியானது இலங்கையின் பொருளாதாரம் 2024 இல் 1.7% ஆல் விரிவடையும் என எதிர்பார்க்கின்றது. சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்களிலான வலுவான உட்பாய்ச்சல்கள் 2024 இல் வளர்ச்சிக்கு நன்றாக அமையும்.

### வட்டி வீதச் சூழல்

இலங்கையின் பொருளாதாரமானது சுதந்திரம் அடைந்ததன் பின்னரான வரலாற்றில் அதன் மோசமான நிதியியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. இதன்போது பணவீக்கம் அதிக உயர்வடைந்தும் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் சாதனையான குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. பொருளாதாரத்தினை நிலைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை வீதங்களை 1050[3] அடிப்படை புள்ளிகளினால் மே 2023 வரைக்கும் அதிகரித்தது. பாரிய பொருளாதார அடிப்படைகள், நடந்துகொண்டிருந்த நாணய இறுக்கமடைதல் நடைமுறைகளுக்கு சாத்தியமாக எதிர்வினையாற்றியதுடன், பணவீக்கமானது எதிர்பார்த்த கட்டத்திலும் பார்க்க விரைவாக மிதமான நிலையினை அடைந்தது. விலைகள் மிதமான நிலையினை அடைந்ததன் காரணமாக, இலங்கை மத்திய வங்கி ஜூன் 2023 இலிருந்து கொள்கை வீதங்களை 650[3] அடிப்படை புள்ளிகளினால் குறைத்து இறுதியாக இடம்பெற்ற நாணயக் கொள்கை மீளாய்வின் பிரகாரம் நிலையியல் வைப்பு வசதி வீதத்தினை (SDFR) மற்றும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதத்தினை (SLFR) முறையே 9.00%[4] மற்றும் 10.00%[4] ஆக பராமரிப்பதற்கு தீர்மானித்தது. நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்தும் வழிமுறையானது சமீப காலங்களில் இடைநிறுத்தப்படும் எனவும், இதுவரைக்கும் பொறுப்பேற்கப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளுக்கு அமைய சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி மேலும் செம்மையாக்கப்படுவதற்கு விடப்படலாம் எனவும் நாம் நம்புகின்றோம். இதன் பிரகாரம், மேம்பட்ட சந்தை திரவத்தன்மை மற்றும் பணவீக்கத்திலான அடக்கப்பட்ட கேள்விப் பக்கத்திலான அழுத்தங்களினால் துணையளிக்கப்பட்டு மத்திய காலத்தில் சந்தை வட்டி வீதங்கள் கொள்கை வீதங்களுடன் ஒன்றிணையும் என நாம் நம்புகின்றோம்.

மேலும், அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள், இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கும் மற்றும் ச.நா.நி. மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து பெறப்பட்ட நிதிகளுக்கும் பதிலளிக்கும் விதமாக வீழ்ச்சியடையும் இடர் வட்டத்தினால் துணையளிக்கப்பட்டு ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை அவதானித்தது.

வங்கியியல் துறையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட நிலுவையிலுள்ள கடனானது ஜூன் 2023 இலிருந்து குறிப்பிடத்தக்களவு விரிவடைந்துள்ளதுடன் முன்னோக்கிய காலத்தில் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணவீக்கம்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI,2021 = 100) அளவிடப்படும் தலைப்புப் பணவீக்கமானது டிசம்பர் 2022 இல் காணப்பட்ட 59.20%[2] இலிருந்து டிசம்பர் 2023 இல் 4%[1] ஆக நிறைவடைந்தது. டிசம்பர் 2023 இல் உணவுப் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் 0.3%[5] ஆல் அதிகரித்துள்ளவேளை உணவல்லாத பணவீக்கமானது 5.8%[5] ஆல் வீழ்ச்சியடைந்தது. ஜனவரி 2024 இலிருந்தான பெறுமதி சேர்த்தல் வரியிலான (பெ.சே.வ.) அதிகரிப்பின் (15% இலிருந்து 18% ஆக) காரணமாக மற்றும் அத்துடன் சேர்த்து பெ.சே.வ. இலான பல விலக்களிப்புகள் அகற்றப்பட்டதனால், சமீபத்தைய காலத்தில் பணவீக்கத்தில் ஒரு தடவையிலான மேல் நோக்கிய வேகம் எதிர்பார்க்கப்படுவதுடன், இது தற்காலிகமானது எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிவாரித் துறை**

2023 இல் வெளிவாரித் துறையானது ஒரு கணிசமான மேம்பாட்டினை கண்டது. தொழிலாளர் பணமனுப்பல்களிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் சுற்றுலாத் துறையிலான உயர் வருமானங்களும் வெளிவாரித் துறைக்கு துணைபுரிந்தன. நாட்டின் மொத்த அதிகாரபூர்வ ஒதுக்கங்கள் டிசம்பர் 2023 இல் அமெரிக்க டொலர் 4.4[3] பில்லியனாக அதிகரித்தது. இது பயன்பாட்டிலான நிபந்தனைகளுக்குட்பட்ட சீனாவின் பீபள்ஸ் வங்கியிடமிருந்தான பரிமாற்றல் வசதியான அமெரிக்க டொலர் 1.4[7] பில்லியனையும் உள்ளடக்குகின்றது. 2023 இன் போது அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடானது தேறிய உட்பாய்ச்சலாக USD 210[7] மில்லியனை பதிவுசெய்தது. அதேசமயம், நாணயமாற்று விகிதமானது இவ்வாண்டின்போது 12.1%[7] மதிப்பேற்றத்தினை பதிவுசெய்து 2023 இன் இறுதியில் LKR 323.92/USD[7] ஆக காணப்பட்டது.

**CTCLSA குரோத் ஈக்யூட்டி வன்ட் (ஆரம்பம்: 27 பெப்ரவரி, 2012)**

**நிதிய முகாமையாளர்**


குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவுகோல்**

இந்த நிதியமானது ஒரு திறந்த வளர்ச்சி நிதியமாகும் என்பதுடன் இது மத்திய காலத்திலிருந்து நீண்டகாலம் வரையில் மூலதன பெறுமதியுயர்வை அடையும் குறிக்கோளுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பன்முகப்படுத்தப்பட்ட உரித்துவப் பிணையங்களின் தேக்கத்தில் முதலீடு செய்கின்றது.

**கருத்துரை**

**நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு**




**காட்சிப்படுத்தல் 02: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு**[1]

| காலம்* | நிதியம் | அளவுகோல் ASPI | S&P SL 20 | ASTRI |
|---|---|---|---|---|
| **YTD – 2023** | **31.94%** | 25.50% | 16.42% | 28.17% |
| **ஆரம்பத்தில் இருந்து திரண்டது** | **142.70%** | 94.54% | 3.82% | 119.82% |
| **ஆரம்பத்தில் இருந்து CAGR** | **7.77%** | 5.78% | 0.32% | 6.88% |

*குறிப்பு: அனைத்து பங்கு விலைச் சுட்டி (ASPI), அனைத்து பங்கு மொத்த விளைவுச் சுட்டி (ASTRI) மற்றும் S&P ஸ்ரீலங்கா 20 சுட்டி என்பன 29 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான கொ.ப.ப. தரவுகளின் அடிப்படையிலாகும்.*


** செயற்திறன்கள் 29 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மாத இறுதி விலையின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்த கால செயற்திறன்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன், இது எதிர்கால விளைவுகளுக்கான எவ்விதமான உத்தரவாதமும் அல்ல.*

29 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த காலத்திற்கு, நிதியமானது 31.94%[14] ஆல் அதிகரித்தவேளை ASPI மற்றும் S&P SL 20 சுட்டிகள் முறையே 25.50%[14] மற்றும் 16.42%[14] ஆல் அதிகரித்தன. ஆரம்பத்திலிருந்து நிதியமானது 142.70%[14] விளைவினை வழங்கியுள்ளதுடன் இது அதே காலத்தின்போது அனைத்து பங்கு விலைச் சுட்டியின் செயற்திறனான 94.54%[14] இனை விஞ்சியுள்ளது.

**காட்சிப்படுத்தல் 08: 29 டிசம்பர் 2023[14] இல் உள்ளவாறான நிதியத்தின் முதல் 5 உரித்துடைமைகள்**

| தே.சொ.பெ. இன் அடிப்படையில் முதல் 5 உரித்துடைமைகள் | | |
|---|---|---|
| பங்கு | குறியீடு | தே.சொ.பெ. இன்% |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | JKH.N0000 | **7%** |
| சம்பத் பேங்க் பிஎல்சி | SAMP.N0000 | **6%** |
| சன்சைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | SUN.N0000 | **5%** |
| டோக்கியோ சிமெண்ட் கம்பனி லங்கா பிஎல்சி | TKYO.N0000 | **5%** |
| பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி | PLC.N0000 | **5%** |

**துறைக்கான ஒதுக்கீடு (காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளுடன்)**




**காட்சிப்படுத்தல் 09: 29 டிசம்பர் 2023[14] இல் உள்ளவாறான நிதியத்தின் துறைக்கான ஒதுக்கீடு**

நாடானது மீட்டலுக்கான ஒருகணத் தோற்றத்தைக் காண்பித்திருந்தாலும், வருடத்தின் முதலாம் பாதியின் போது, உயர் நிதியளித்தல் கிரயம், மின்சாரக் கட்டண உயர்வுகள், வரிச் சீர்திருத்தங்கள் போன்ற பாரிய பொருளாதார சூழலில் காணப்பட்ட சவால்களின் காரணமாக கூட்டாண்மை உழைப்புகள் வீழ்ச்சியடைந்தன. மேலும், உயர்வடைந்த வட்டி வீதங்களுக்கு மத்தியில் உரித்துவச் சந்தையானது மந்தமாகக் காணப்பட்டது. வழங்கப்பட்ட செயற்பாட்டு சூழலினுள் நிதியமானது நீண்ட காலத்தில் நலனடைவதற்காக அடிப்படையில் திடமான திரவத்தன்மையுள்ள பங்குகளில் முதலீடு செய்தது. எமது முன்னிறுத்தமானது வட்டி வீதங்களில் ஒரு வீழ்ச்சியினால் நலனடையக்கூடிய கம்பனிகளில் பராமரிக்கப்பட்டவேளை, நாம் உள்ளூர் நுகர்விலான ஒரு மீட்சியுடன் முன்னேற்றமடையக்கூடிய நுகர்வு சார்ந்த பங்குகளிலும் கவனஞ் செலுத்தினோம். மீளாய்வுக் காலத்தின் இறுதிப் பாகத்தின்போது, நிதியமானது மூலதனப் பொருட்கள், வங்கியியல் துறை, பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் சேவைகள் துறை மற்றும் சுற்றுலாத் துறைகளில் அதன் வெளிப்பாட்டினை அதிகரித்தது. இது முன்னோக்கிய காலத்தில் சந்தை வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடைந்து உயர்ந்த கூட்டாண்மை உழைப்புகளுக்கு துணைபுரியும் என்ற எதிர்பார்ப்பிலாகும். உள்ளூர் கடன் உகப்பாக்கத்தில் (உ.க.உ.) வங்கிகளில் சிறுமமான தாக்கம் காணப்பட்டதன் காரணமாக வங்கியியல் துறையில் ஒரு உயர்வான மீள் நிலைப்பாடு காணப்பட்டது.

எதிர்வரும் தேர்தல் சுழற்சியின் உறுதியின்மைகள் இருந்தாலும், வெளிவாரி கடன் மீள்கட்டமைப்பிலான (வெ.க.மீ.) தாமதங்கள் மற்றும் பெ.சே.வ. இலான ஏற்றங்கள் மற்றும் பெ.சே.வ. விலக்களிப்புகளின் நீக்கலினால் உருவான பாதகமாக தாக்கம் என்பவற்றினால், உரித்துவ சந்தையானது கவர்ச்சிகரமான மதிப்பு முன்மொழிவுகளாக இருக்கும் என நாம் நம்புகின்றோம். பாரிய பொருளாதார மாறிகளிலான மேம்படுத்தல்களுக்கு மத்தியில் குறைவான வட்டி வீதச் சூழலுடன் உரித்துவம் ஒரு வரி வினைத்திறனான சொத்து வகுப்பாகக் காணப்படும். சமீப காலத்தில் குறைவான வட்டி வீத சூழ்நிலைக்கு மத்தியில், நிலையான வருமானச் சந்தைகளிலிருந்து உரித்துவச் சந்தைக்கான சொத்து ஒதுக்க நகர்வு ஏற்படலாம் என நாம் நம்புகின்றோம். நிலவுகின்ற பாரிய பொருளாதாரச் சூழலில், வட்டி வீத பயனாளிகள், ஏற்றுமதி அடிப்படையிலான கம்பனிகள், சுற்றுலாத் துறை, வங்கியியல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் சேவைத்துறை பங்குகளில் நாம் முன்னிறுத்தம் செய்வோம். உரித்துவத்திலான எமது மதிப்பேற்றப் பார்வையினால் நாம் உரித்துவத்தில் 80% இற்கும் அதிகமான சொத்து ஒதுக்கத்தினை வைத்திருப்பதற்கு தேர்ந்தெடுத்துள்ளோம்.

29 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 76.94[12] மில்லியன் ஆகும் என்பதுடன் நிதியத்தில் 236[12] அலகு உடைமையாளர்கள் உள்ளார்கள். 29 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் மீட்பு விலை ரூபா 24.2701[12] ஆகும்.